# DEPOSITION OF WITNESS

(Chapter XXXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, PANRUTI.

DVC. No.15/2023

Deposition of Witness prosecution

| Name | நித்யா | Taluk | பண்ருட்டி |
|---|---|---|---|
| Father's Name | தயாநிதி | Village | பெரிய கள்ளிப்பட்டு |
| Age | 27 | Calling | |

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3ன் படி **27.01.2026** அன்று குற்றவியல் நடுவர் நீதித்துறை நடுவர் எண்.2 திரு.லூ.மார்ஷல் ஏசுவடியான் B.A, L.L.B(Hons) அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

**எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி-**

என்னுடைய முந்தைய குறுக்கு விசாணையில் கூறியுள்ளபடி Assests and Libities குறிப்பிட்டுள்ள மனுதாரியி என்னுடைய மற்றும் ஒன்றாவது எதிர்மனுதாரரின் சொத்து விவரத்தை உறுதிபடுத்தி அது தொடர்பான ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அது தொடர்பான ஆவணங்கள்என்னவென்றால் 1) அவர்களுடைய நிலம் மற்றும் வீடுதொடர்பான சிட்டா மற்றும் Bio data ஆகியவற்றை கொடுத்துள்ளேன். அந்த சிட்டாவில் யாருடைய பெயர் இருந்தது என்றால் 1வது எதிர்மனுதாரின் அப்பவான ராமமூர்த்தி பெயரிலிருந்தது. அது தொடர்பான விஸ்திரம் பற்றி எனக்கு தெரியாது. நான் அந்த ஆவணத்தை எனது வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டேன். நான் வழக்கறிஞரிடம் கொடுத்தாக கூறிய நிலம் தொடர்பான ஆவணம் என்னிடம் எ.சா.ஆ.8 இல்லை.

2) இன்றையதினம் வரைக்கும் வருமானத்தை உறுதி செய்யும் ஆவணங்களை என்மூலமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் ஆவணங்களை வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். எனக்கு திருமாங்கல்யம் எனது கணவரால் அணிவிக்கப்பட்டு தான் திருமணம் நடந்ததா என்றால் சரிதான். நான் தற்போது நீதிமன்றத்தில் ஏன் விவகாரத்து பெறாமல் எதிர்மனுதாரால் அணிவிக்கப்பட்ட திருமாங்கல்யத்தை அணிந்துகொண்டு வரவில்லை என்றால் எதிர்மனுதாரரும் அவரது

குடும்பமும் எனக்கு மிகுந்தகொடுமை அளித்துள்ளனர். அதனால் என்னால் அதை தாங்கி கொள்ளமுடியவில்லை அதனால் அணியவில்லை பின்னர் சாட்சி தனாக முன்வந்து நான் அணிந்துகொண்டு தான் இருந்ததேன். அதன்பின் பெரியவர்கள் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தி எதிர் மனுதாரர் கட்டிய திருமாங்கல்யத்தை தனக்கு வேண்டும் என்று கேட்டார் என்று சாட்சியம் அளித்தார். திருமாங்கல்யம் ஒரு பெண்ணிற்கு எவ்வளவு முக்கியம் என்று எனக்கு தெரியுமா என்றால்தெரியும். ஆனால் அதற்கு 1வது எதிர்மனுதாரர் தகுதியானவர்அல்ல. அவர் அணிவித்த திருமாங்கல்யத்தை நான் அணியாமல் இருக்கும் பட்சத்தில் மனைவியாக நான் 1வது எதிர்மனுதாரரிகிய எனது கணவரிடம் இருந்து வாழ்உரிமை பெறுவதற்கு எனக்கு எந்தவிதமான தகுதியும் இல்லையென்றால் சரியல்ல. அவர்கள் இளைத்த கொடுமையின் காரணமாக நான் திருமாங்கல்யத்தை அணியவில்லை.

3) பெரியவர்கள் முன்னிலையில் திருமாங்கல்யத்தை கேட்ட சங்கதிகளையும் அவர் கொடுமை படுத்தியதினால் அவர் கட்டிய திருமாங்கல்யத்தை கழட்டிய சங்கதி தொடர்பாகவும் விழுப்பும் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரிலும், நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளகுடும்ப வன்முறை தடுப்பு சட்டத்தின் கீழ் தாக்கல் செய்துள்ள புகாரிலும், பண்ருட்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்துள்ள புகாரிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அப்போது நான் திருமாங்கல்யத்தை அணிந்துதான் இருந்தேன். நான் நீதிமன்றத்தில் முதன்மை விசாரணை வாக்குமூலம்தாக்கல் செய்தபின்பு தான் திருமாங்கல்யத்தை கழட்டினேன். முதன்மை விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்தபிறகும் எனக்கும் 1வது எதிர்மனுதாரருக்கும் எந்தவிதமான பேச்சுவார்த்தையும் இல்லையென்றால் சரிதான். நான் மனைவி என்கின்ற தார்மீக பொறுப்பிலிருந்து விலகி எதிர்மனுதாரர் மீது பொய்யான விவரங்களை சொல்லிவருகிறேன் என்றால் சரியல்ல.

4) விழுப்புரம் குடும்ப நீதிமன்றத்தில் கலந்துரிமை மீட்டு எடுப்பு மனு அனுமதிக்கப்பட்ட பின் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ எந்தவித நடவடிக்கையும் எடுக்கமால் அவர் மீது பெய்யான அனுசரனையுடன் பல விவரங்களை சொல்லி வருகிறேன் என்றால் சரியல்ல. கலந்துரிமை மீட்டு எடுப்பு மனு உத்தரவை பின்பற்றி சேர்ந்து வாழ்வதற்காக வழக்கறிஞர் மூலம் 1வது எதிர்மனுதாரர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பிற்கு நான் ஏதேனும் பதில் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. என் பொருட்டு பதில் அறிவிப்பு வழக்கறிஞரிடம் டம் மூலம் சார்வு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் வழக்கறிஞரிடம் நான் கூறினேன் அவர்கள் அனுப்பினார்களா என்று எனக்கு தெரியாது. எதிர்மனுதாரரின் வழக்கறிரிடம் பதில் அறிவிப்பை சாட்சியிடம் காண்பித்த பின் சாட்சி வழக்கறிரிடம் பதில் அறிவிப்பு

அனுப்பியுள்ளார் என்று ஏற்றுக்கொண்டார். **என்னிடம் காட்டப்படும் என்பால் 1வது எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் பதில் அறிவிப்பின் நகல் எ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி பதில் அறிவிப்பில் சேர்ந்து வாழ எனக்கு விருப்பம் உள்ளதாக ஏதேனேனும் சங்கதிகளை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

5) குடும்ப நீதிமன்றத்தில் உத்தரவு பிறக்கப்பட்ட பின் வழக்கறிரிடம் அனுப்பிய பதில் அறிவிப்பிலும் தற்போது நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த மனுவிலும் பொருட்கள் தொடர்பான விவரங்களை இணையாக கொடுத்துள்ளேன் என்றால் இரண்டும் ஒன்றாக தான் சொல்லியுள்ளேன். இருசக்கரம் வாகனம் வாங்குவதற்கு 2 லட்சம் கேட்டதாக பதில் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் தற்போது தாக்கல் செய்துள்ள மனுவில் 2.5 லட்சம் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் அவர் 2.5லட்சம் தான் கேட்டார். எதிர்மனுதாரர் தரப்பில் எந்தவிதமான கோரிக்கையும் இல்லாத காரணத்தினால் தான் பதில் அறிவிப்பிலும், நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனவிலும் தொகையின் விவரம்முரண்பட்டு உள்ளது என்றால் சரியல்ல.

6) நான் பண்ருட்டி அனைத்துமகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் இதே நீதிமன்றத்தில் இந்திய தண்டனை சட்டபிரிவு 498A, 294(b) மற்றும் பிரிவு 4 of வரதட்சனை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு ஆண்டு பட்டியல் வழக்கு எண்.250/2024 ஆக கோப்பிற்காக எடுக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் புகாரில் அடிப்படையில் தான் வழக்கானதுகோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. **மேற்படி புகாரின் சான்றிட்ட நகல் எ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படிபுகாரில் 2.5 லட்சம் ரூபாய் எதற்குகேட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கார் வாங்குவதற்காக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அவர் இருசக்கர வாகனம் வாங்குவதற்கு கேட்டுதான் 2.5 லட்சம் ரூபாய் கேட்டார். நான் 2.5 லட்சம் ரூபாய் கொடுத்தேன் அதில் அவர் கார் வாங்கினாரா பைக் வாங்கினாரா என்று தெரியாது. பின்னர் சாட்சி தானாக முன்வந்து கார் வாங்க தான் கேட்டார் என்று சாட்சியம் அளித்தார். பின்னிட்டு எதுவும் வாங்கவில்லை சார் என்று சாட்சியம் அளித்தார். அவரிடம் 2.5 லட்சம் ரூபாய் நான் கொடுத்தேன். தொகை அவரிடம் தான் உள்ளது என்று சாட்சியம் அளித்தார்.

7) என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் வாகனம் வாங்க 2.5 லட்சம் ரூபாய் ரொக்கமாக கொடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எந்தவிதமான வாகனம் வாங்குவதற்கும் எதிர்மனுதாரர் தரப்பில் கோரிக்கை இல்லாத காரணத்தினால் தான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பொதுவாக

வாகனம் என்று குறிப்பிட்டும் பல இடங்களில் முரண்பட்ட தகவல்களை அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. அவர்கள் கார் வாங்குவதற்கு கேட்டார்கள். அவர் அணிவித்த திருமாங்கல்யத்தை நான் அணிந்துகொள்வதற்கு எதிர்மனுதாரர் தகுதியற்றவர் என்று கூறியுள்ளநிலையில் 1வது எதிர்மனுதாரர் தவறை திருத்திக்கொண்டு என்னுடன் சேர்த்து வாழ மறுத்து வருகிறார் என்று எதன்அ டிப்படையில் பிரமான வாக்குமூலத்தில் நான் கூறியுள்ளேன் என்றால் அவர் ஒருமுறை கூட என்னை சேர்ந்து வாழ வரசொல்லி அழைக்கவில்லை. வழக்கறிரிடம் அறிவிப்பு மட்டும் தான் அனுப்புவார். மேற்படி அவர் அனுப்பிய அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பிலோ அல்லது நேரடியாகவோ நான் சென்று அவரிடம் சமரசம் பேசி சேர்ந்தது வாழ நான் முயற்சி எடுத்தேனா என்றால் வாழ விருப்பம் இல்லை அதனால் நான் சேர்ந்து வாழ முயற்சிக்கவில்லை.

8) 1வது எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ விருப்பமாக தான் இருக்கிறார் நான் எந்த முயற்சியும் மேற்கொள்ளாமால் என்னுடைய பெற்றோரிடன் துண்டுதலின் பேரில் பல பொய்யான புகாரை எதிர்மனுதாரர் தரப்பிற்கு எதிராக கொடுத்துவருகிறேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பிறகு 3வழி செல்லுதல் (மறுவீடு) நிகழ்ச்சி எல்லாம் என்னுடைய திருமணத்திலும் நடந்ததா என்றால் நடந்தது. திருமணம் முடிந்து 5 நாட்களுக்குள் 3வழி செல்லுதல் நிகழ்ச்சி நடப்பெற்றுவிட்டதா என்றால் திருமணம் முடிந்து அன்று இரவு எங்கள் வீட்டிற்கு நானும் 1வது எதிர்மனுதாரரும் வந்துவிட்டோம் பின்னர் இரண்டு நாட்கள் கழித்து 1வது எதிர்மனுதாரர் வீட்டிற்குசென்றுவிட்டோம். அன்றையதினமே அவர்கள் வீட்டிற்கு சென்ற ஊடனே எனது அப்பா பைக்கில் என்னை என்னுடைய வீட்டிற்கு அழைத்துவந்துவிட்டார். அதன்பின் 1வது எதிர்மனுதாரரின் குடும்பத்தினர் என்னை பின்னாலே வந்து அழைத்துச்சென்றுவிட்டனர்.

9) மேற்படி எதிர்மனுதாரரின் குடும்பத்தினர் என்னை அழைத்து சென்றபின் மறுநாளே என்னுடைய வீட்டிற்கு எனது கணவராகிய 1வது எதிர்மனுதாரை அழைத்து சென்றுவிட்டேன் அங்கு வைத்து தான் குடும்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதார் குடும்பத்தினர் அழைத்து சென்றபின் 1மாதம் வரை எதிர்மனுதாரர் வீட்டில் தான் குடும்பம் நடத்தி வந்தேன். நானும் எனது கணவரும் எனது அப்பா, அம்மா வீட்டில் வைத்து எவ்வளவு நாங்கள் குடும்பம் நடத்தினோம் என்றால் ஒரு மாதம் வரை குடும்பம் நடத்தினோம். 1வது எதிர்மனுதாரை அவரது பெற்றோருடன் சேர்ந்தது வாழ நான் விரும்பாமல் தொடர் தொல்லை கொடுத்தால் தான் 1வது எதிர்மனுதாரர் என்னுடன் ஒரு மாதம் என்னுடைய வீட்டில் குடும்பம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. வேர்கடலை பிடுங்குவதற்காக எனது அம்மா வீட்டிற்கு எனது கணவரது வீட்டிலிருந்து சென்ற நான்

எத்தனை நாட்கள் அங்கு இருந்தேன் என்றால் ஒரு மாதம் இருந்தேன். அதற்கான காரணம் என்னவென்றால் என்னுடைய கணவர் 5 மூட்டை வேர்கடலை வேண்டும் என்று என்னிடம் கேட்டார். மீதமுள்ள மூட்டையை விற்று காசுயை கொண்டுவா என்று 1வது எதிர் மனுதாரர்கேட்டார். அதையும் எனது அப்பா எடுத்து வைத்துவிட்டார். அதன்பின்னும் இன்னும் வேண்டும் வேண்டும் என்று கேட்டதால் நான் கொடுக்கவில்லை அதனால் அவர் நான் போன் செய்தால் எடுக்கவில்லை என்னுடைய நம்பரை பிளாக் செய்துவிட்டார். நான் நேரில் சென்று ஏன் பார்க்கவில்லை என்றால் நான் அங்கு சென்றால் என்னை குற்றவாளி போல் நிற்கவைத்து இருப்பார்கள். அதனால் நான் அங்கு நேரில் செல்லவில்லை.

10) மேற்படி நான் ஒரு மாதம் வேர்கடலை பிடுங்க வந்துவிட்டு செல்லாத காரணத்தை புகாரிலும் மற்றும் நீதிமன்ற மனுவிலும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் போனை பிளாக் செய்துவிட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன். 1வது எதிர்மனுதாரை எனது வீட்டிலே தங்க வைக்க வேண்டும் என்று முயற்சியில் தான் வேர்கடலை பிடுங்க சென்றுவிட்டு எதிர்மனுதாரர் வீட்டிற்கு வராமல் அங்கேயே தங்கிவிட்டேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாருடைய வீட்டில் வாழவிரும்பாமல் என்னுடைய பெற்றோரின் வீட்டில் எதிர்மனுதாரர் குடும்பம் செய்ய வேண்டும் என்று பொய்யான பல புகார்களை எதிர்மனுதாரர் மீது கொடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. மனுவில் கூறியுள்ளபடியும் புகாரிலும் மற்றும் முதன்மை வாக்குமூலத்தில் கூறியுள்ளபடி எந்தவிதமான கொடுமையும் எதிர் மனுதாரப்பிலிருந்து செய்யவில்லை என்றால் சரியல்ல.

11) எந்தவிதமான குடும்ப வன்முறையும் உரிமை மீறலும் எதிர்மனுதாரர் தரப்பினால் எனக்கு நடக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வன்முறை நடந்தது. நான் மனைவி என்ற மீறி நடந்துவிட்டேன் அதனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. என்னுடைய வருவாயை தெரிவிக்காமல் 1வது எதிர்மனுதாரரின் வருவாயை உறுதி செய்யாமல் இருக்கும் பட்சத்தில் இந்த மனு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் எந்தவிதமான உறுதிபடுத்தகூடிய ஆவணங்களும் இல்லாதா காரணத்தினால் தான் Assests and Libities ஆவணத்தை காலதாமதாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. குடும்ப நீதிமன்றத்தில் உத்தரவிட்டபின் சேர்ந்து வாழமால் நான் நடந்து வரும் செயல் தவறானது என்றால் எனக்கு விருப்பமில்லை அதனால் நான் சேர்ந்தது வாழவில்லை. என்னுடைய மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மனுதாரர் தரப்பு மறுவிசாரணை-இல்லை.**